ISBN : 978-93-5996-390-7

45

# சங்க இலக்கிய மருத்துவமும் வழிபாட்டு முறைகளும் (முனைவர் க.கமலா,)

Date of submission:2025-11-10 Date of acceptance: 2025-11-20
Date of Publication: 2025-12-2
Corresponding auther's Name:Dr.K.Kamala
Email:kkamaladrgmail.com

பண்டைக்கால மக்கள் சடங்காச்சாரங்கனை வாழ்க்கையில் பெற மிக அரியமாகக் கருதினர் மழை பெய்யவும் பயிர் வளரவும் காய் கிழங்குகள் கிடைக்கவும். நோய் நொடிகள் வராமல் இருக்கவும். வேட்டையில் விலங்குகள் கிடைக்கவும் இயற்கை வித்துக்கள் நேராமல் இருக்கவும் வழிபாடுகளை நிகழ்த்தினா. அதோடு தங்களுக்கு மேலாள ஒரு சக்தி இயற்கையில் நிரம்பியுள்ளது என்ற நம்பிக்கையில் இயற்கையினையும், வழிபடத் தொடங்கினர் தங்கள் வாழ்வில் ஏற்படுகின்ற நோய்களுக்கும் தீமைகளுக்கெல்லாம் காரணம்

தெய்வத்தின் கோபம் எனவும் நம்பினர் இந்த நம்பிக்கைகளின் கரணமாகவே
வழிபாட்டு முறைகள் தோற்றம் பெற்றன எனலாம் த்தம்பிக்கைகளின் அடிப்படையில் நோக்கும் போது சங்க இலக்கிய மருத்துவமும் வழிபாட்டு தொடர்புடையதாக காணப்படுகின்றது. முறைகளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக காணப்படுகிறது

மருத்துவம்

மாந்தர்க்கு வரும் உடல், உள நோய்களைத் தடுக்கவும் வந்தபின

முனைவர்.க.கமலா,பேராசிரியர், தமிழ்த்துறை
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம்-117

ISBN : 978-93-5996-390-7



விலகவும் மேற்கொள்ளப்படும் செயலே மருத்துவம் ஆகும் மருந்து எனும் சொல்லுக்கு (மொழி ஞாயிறு தேவ நேயப் பாவணர்.

"பல்வகை நோய்களையும் தடுப்பனவும் தீர்ப்பனவுமான பல்வேறு நலப்பொருள் தொகுதி" (திருக்குறள் தமிழ் மரபுரை' ப.S2) எனக் குறிப்பிடுகிறார்.

மருத்துவன்

மருத்துவன் என்று குறிக்கப்படும் சொல் வழக்கு சங்ககால முதலே தமிழகத்தில் நிலவி வருவதை 'உறையூர் மருத்துவன் தாமோதரனார்" மருத்துவள் நல்லச்சுதனார்' எனும் சங்கப்புலவர் பெயர்கள் சுட்டும்.

'திருந்திய யாக்கையின் மருத்துவன் ஊட்டிய மருந்துபோல் மருந்தாகி மனமுவப்ப

(கலித்தொகை, 'பாலைக்கலி' பாடல்.16)

எனவரும் பாலைக்கலியின் பாடல் குறிப்பில் தான் முதன் முதலாக 'மருத்துவன் ' எனும் சொல் வழக்குக் காணப்படுகின்றது.

இவ்வாறு மருத்துவம் மருத்துவன் என்ற முறைகளில் சங்ககால மக்கள் நோய்களுக்குத் தீர்வுகள் கண்டாலும் அவர் தம் வாழ்வில் வழிபாட்டு முறைகளுக்கு முக்கியத்துவம் அளித்தனர்.

இசை மருத்துவம்

எங்களால் மக்கள் இசைக்கருவிகளை நீர்த்துக் கொண்டயினைக் காணமுடிகிறது சங்ககாலத்தில் போரில் அடிபட்டுக் காயாடைந்த வீரர் இல்லங்களில் கொண்டுசென்று விழுப்புண்கள ஆற்ற மருத்துவம் செய்யும் போது புண்களால்

முனைவர்.க.கமலா,பேராசிரியர், தமிழ்த்துறை
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம்-117

ISBN : 978-93-5996-390-7



துயஞ்றும் வீரர் மனநிலை மேலும் பொருட்டும் முதலில் இல்லத்தின் சூழலை மாற்றுவர் மேறுப்புஸ் நலிதாமல் இருப்பதன் பொருட்டும் புண்கள் விரைந்து பேய் அக்கும் என்பது அக்காலத்து மக்களிடையே நிலவிய ஆழமான நம்பிக்கை, இந்நம்பிக்கையால் புண்பட்ட வீரனின் மனநிலை நலிவுற்று விடகூடாது என்ற எண்ணத்தில் பேய்களை அர்வீM க இரம் வேம்பு ஆகிய மரங்களின் தழைகளை இல்லத்தில் வாயிலில் செருகி வைப்பர். நறுமணம் கமழும் அகிற்புகைரை புகைப்பர் பேய் பற்றிய அச்சத்தினை இவை மாற்றுவதால் அழப்பட்டு வீரனின் விழுப்புண் விரைவில் ஆறும் என நம்பினர்.

பின்பு புண்பட்ட வீரனின் அருகிலிருந்து ஆம்பம் குழல் ஊதியும் தல் ஓசையை நலகும் மணியை இசைத்தும் புண்ணை ஆற்கும் 'காஞ்சிப் பண்ணை' பாடினர் என்பதற்குக் கீழ்வரும் புறநாற்பா சான்று பகிர்கிறது.

நீங்களி இரவமொடு
வேம்புனைச் செரிலி வாங்கு மருப்பு
யாழொடு பல்லியம் கறங்கக் கைப்ப
பெயர்த்து மையிழு நிழுலி ஐயவி சிதறி
ஆம்பல்
பூம்பொறிக்கழல்கால் நெடுந்தொகை
புண்ணே புறநானூறு பாடல் 281

தொன்றுதொட்டே தமிழகத்தில் இசை மருந்தாகப் பயன்பட்டுள்ளது என்பதை இதன் மூலம் அறிந்து கொள்ள இயல்கின்றது. இன்று இசை மருத்துவம்' என்று அறிவியலார் அறிமுகப்படுத்தும் புதிய மருத்துவத்துறை தமிழகத்திற்கு மிகவும் பழமையானது என்பதும் இதனால் புலனாகிறது.

முனைவர்.க.கமலா,பேராசிரியர், தமிழ்த்துறை
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம்-117

ISBN : 978-93-5996-390-7



## ஆவியுலக வழிபாடு - ஆவியுலக மருத்துவம்

*தீய* ஆவிகளைத் திருபதிப்படுத்தும் நோக்கத்துடனும், ஆவிகளிடமிருந்து வைமையைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துட ஆவியுலக வழிபாடு மக்களிடையே நிகழ்ந்துள்ளது பழத்தில் தமிழர்கள் இறந்தவர்களின் உடல்களைப் பெரிய களில்இட்டுபுதைத்து வைத்தனர் என்றும் இறந்தோரின் ஆவி சமாதிகளில் லைபெற்று இருப்பதாக நினைத்து அந்த ஆவிக்குப் பூசையிட்டனர் legadisa Ayyer, 'South Indian custom's, P.24). நோய்கள், பிரச்சனைகள் ஏற்படும் போது வேலனிடம் குறி கேட்பதை கடனாகக் கொண்டுள்ளனர். இதனை வேலன் வெறியாட்டு என்கின்றனர். வேலன் வெறியாட்டு ஆவியுலக வழிபாட்டோடு மிகுந்த தொடர்புடையது.

### வேலன் வெறியாட்டு

நாட்டுப்புறங்களில் மட்டுமின்றி நகர்ப்புறங்களிலும், அம்மை, வாந்தி. பேதி போன்ற நோய்கள் வந்தால் 'மாரியம்மன் வழிபாடு' என்ற வேண்டுதலின் மூலம் அவற்றைப் போக்கிக் கொள்வதாகக் காண முடிகின்றது. 'குறி சொல்லுதல் என்றொருமுறை நாட்டுப்புறங்களில் இன்றும் நிலவி வருகிறது. இதன் மூலம் மறைந்த முன்னோர்களின் ஆவிகளை அழைத்து நோயாளியின் பிணிக்கு காரணம், அதனை போக்கும் வழி ஆகியவற்றைக் கேட்டு அதன் வழி செயல்பட்டுப் மீணிகளை போக்கிக் கொள்ளும் வழக்கம் இன்றும் தமிழக நாட்டுப்புறமக்களிடையே நிலவி வருகின்றது. 'குறிசொல்லுதல் எனும்

முனைவர்.க.கமலா,பேராசிரியர், தமிழ்த்துறை
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம்-117

ISBN : 978-93-5996-390-7

49

இம்முறையினைநினைவுறுத்தும் வகையில் தொல்காப்பியர் காலத்து வேலன் வெறியாட்டு' அமைந்துள்ளது.

"கட்டினும் கழங்கினும் வெறியென வரும் ஓட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும் ஆடிய சென்றுழி வெறியாட்டத்து வெருவின் கண்ணும்" (தொல்காப்பியம், 'களவியல் 115)

என வரும் குறிப்பு 'வேலன் வெறியாட்டு' எனும் ஆவியுலக மருத்துவம் பற்றிய விவரங்களைக் குறிக்கும் "தலைவனின் பிரிவால் வாடும் தலைவியின் உடல் மாற்றங்களை அறிந்த நற்றாய் மகளின் மேனி வாட்டத்திற்குத் தலைவன் பிரிவு காரணமாவதை உணராது தெய்வக்குற்றம் காரணமாக மெலிகின்றாளோ என ஐயுற்று, அக்குற்றம் நீக்கும் வேலனை அழைத்து வெறியாட்டம் நடத்தச் செய்து மகளின் வாட்டத்தை நீக்குமாறு வேண்டுகிறாள்" (நற்றிணை, பாடல் 53) தெய்வ நம்பிக்கையின் அடிப்படையில் நிகழும் 'வேலன் வெறியாட்டு' இக்காலத்துக் குறி செல்லும் நிகழ்ச்சிக்குப் பெரிதும் பொருந்துவதாகக் கூறலாம்.

கொற்றவை வழிபாடு

தொல்காப்பியர் காலத்திருந்தே கொற்றவை வணக்கம் வழக்கிலுள்ளது. அரசன் கொற்றவன் எனப்பட்டான் கொற்றவன் வழிபட்ட தெய்வம் கொற்றவை ஆயிற்று. கொற்றவை வெற்றித்தரும் தெய்வம் எனக் கருதிப் போருக்குச் செல்லும் வீரர்களும், மன்னர்களும்அத்தெய்வத்தை வழிபட்டனர் கொற்றம் என்பது வெற்றியாகும். இதனைத் தொல்காப்பியரின் 'அடுத்தூர்ந்தட்ட கொற்றத்தானும் எலும் தொடர்கள் புலப்படுத்தும்.

50

ISBN : 978-93-5996-390-7

50

சங்க இலக்கியங்கள் கொற்றவையைப் பலபட விளம்பும். "கொற்றவை நிலையும் அத்திணைப்புறவே" இங்குக் கொற்றவை பாலை நிலக் கடவுளாகப் படைக்கப்பட்டுள்ளாள். ஐயனாரிதனார் இக்கொற்றவையைப் பகைவரை அழிப்பவள் என்கிறார். காட்டில் வாழும் கொற்றவையைக் கலித்தொகை.

பெருங்காட்டுக் கொற்றிக்குப் பேய் நொடித்தாங்கு' எனவும், பதிற்றுப்பத்து, அபிரை பரைஇ ஆற்றல் சால் முன்போடு' உருகெழு மரபின் அயிரை பரலியும்' என்றும் குறிக்கிறது. இங்கு அயிரை எனும் சொல் கொற்றவையைக் குறிப்பதாகும்.

இவ்வாறாக சங்ககால மக்கள் கொற்றவை வழிபாட்டினையும், வாழ்வின் நன்மைக்காக மேற்கொண்டுள்ளனர். சங்ககால மக்கள் ஐந்நிலத்திற்கும் ஒவ்வொரு தெய்வத்தைத் தலைவர்களாகக் கொண்டு வழிபட்டு வந்தாலும் மேற் கூறப்பட்டுள்ள வழிபாட்டு முறைகளையே தங்கள் வாழ்வின் தேவைக்காக நிகழ்த்தி வந்திருக்கின்றனர் என்று புலனாகின்றது. தற்காலத்தில் அறிவியலார் ஆய்வுச் செய்து வரும் மருத்துவ முறைகளான இசை மருத்துவம், ஆவியுலக மருத்துவம் போன்றன சங்ககாலத்திலேயே நடைமுறையில் வழக்கில் இருந்து வந்துள்ளது என்பதையும் அறிய முடிகிறது.

முனைவர்.க.கமலா,பேராசிரியர், தமிழ்த்துறை
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம்-117